புதுமலர் : 06 இதழ் : 03

வைகாசி - ஆனி

# அனல்

இணை ஆசிரியர்கள்
யோ. நிக்சன்
வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் :
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
ரோமர் 12:11

சீயோன் தேவாலய பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.05.2009

## பொருளடக்கம்


- அனலின் குரல்
- அனலின் ஆன்மீகவிருந்து
- மூவரி முத்துக்கள்
- வாலிபர் வளாகம்
- கதையும் கற்றதும்
- குறுக்கெழுத்துப் போட்டி - 31
- பக்தர்களின் பயிலகம்
- வித்திடும் வித்தகர்
- வினாவிடை - 33
- நற்செய்திப்பகுதி
- நீ எங்கே இருக்கிறாய்


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும் வேதனையினாலும் குடும்பப் பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுதவேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

The Editor "Anal"
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

ஆசிரியர் "அனல்"
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

T.P. : 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்

*கிறிஸ்துவுக்குள்ளாக நாம் தேவனின் சுவிகாரப்புத்திரர்.*

## சுவிகார புத்திரரின் சலாக்கியங்கள்

1.எமக்கு ஒரு புதிய அப்பா அல்லது பிதா ரோம 8:14,15) மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள். அந்த படி திரும்பவும் பயப்படு கிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகின்ற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் எம் தேவனை பிதாவே என்று அழைக்கின்றோம். தேவனுடைய குடும்பத்தினுள் நாம் புத்திர சுவிகாரம் பெறும் போது எம் உறவு நெருக்கமாகிறது. இது திரும்பவும் கலா:4:4 –6 சொல்லப்படுகிறது. "நாம் சுவிகாரத்தை அடையும் படி....." தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராய் இருக்கிற படியினால் அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இதயங்களில் அனுப்பினார். நாம் நம் தேவனுடன் கொண்டிருக்கும் உறவு எப்படிப்பட்டதென அறிந்திருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட உறவு நமக்கிருக்கும் போது தேவன் நமக்கு இரங்குகிறார். சங் 103:13 தகப்பன் தன்பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு இரங்குகிறார். இரங்குகிறார் என்பது எபிரேய பாஷைப்படி தடவிக்கொடுக்கிறார் – அன்பாகத் தழுவுகிறார். சீராட்டுகிறார்.

02. நாம் தேவனின் சொத்தாகின்றேம். ரோமர் மத்தியில் சுவிகாரம் எடுத்தல் வழக்கமான ஒன்றாக இருந்தது. சுவிகாரத்தைப் பற்றி எமக்கு புரியா விட்டாலும் ரோமாபுரியில் இருப்பவர்களுக்கு இது நன்றாகப் புரியும். ரோம சாம்ராஜ்ஜியத்தில் தகப்பனே குடும்பத்தின் தலைவன். குடும்பத்தில் ஒவ்வொரு அங்கத்தவர் மீதான ஜீவனுக்குரியதும், மரணத்திற்குரியதமான அதிகாரம் அவனிடம் இருந்தது. வாழ்வா, சாவா என்பதை தகப்பன் தீர்மானிக்கலாம். இங்கு அப். பவுல் புத்திர சுவிகாரத் தின் இன்னோர் பக்கத்தை காட்டுகின்றான். 1 கொரி. 6:19,20.... நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவென்றும் அறியீர்களா?

கிரயத்துக்கு கொள்ளப்படீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். நாம் தேவனுடைய சொத்தாக மாறுகின்றோம். அவருக்கு தான் எம்மீது முழு உரிமையும் உண்டு. எந்த மகனுக்கும் தகப்பனுடன் பேரம் பேச முடியாது. தகப்பனின் வார்த்தையே முடிவானது. எம்மீது தேவனுக்கு முழு அதிகாரமும் உண்டு.

3. <u>நாம் இன்னோர் இராஜ்ஜியத்திற்குள் மாற்றப்படுகின்றோம்.</u> ரோம பேரரசில் ஒரு மகன் சுவிகாரம் எடுக்கப்படுவதாயின் அவன் ஒரு குடும்பத்திலிருந்து இன்னோர் குடும்பத்திற்கு மாற்றப்படவேண்டும். ஒரு தகப்பனுடைய கட்டுப்பாட்டிற்குக் கீழ் இருந்து இன்னோர் தகப்பனுடைய கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றான். கொலோ 1:13 இருளின் அதிகாரத்தில் நின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கின்றோம். இது நிறைவேற யுத்தமும் வெற்றியும் அவசியம். இத்தருணத்தில் கிறிஸ்து நமக்காக கொண்ட ஜெயத்தை எண்ணிப்பாருங்கள். கொலோ 2:15 துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரித்துக்கொண்டு, வெளியரங்கமான கோலமாகி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார், இது கிறிஸ்து அந்தகார சக்திகளை எதிர்த்துப் போய் வென்றதைப்பற்றி கூறுகிறது. இதனால் தான் பிசாசின் வசம் இருந்ததை தன் வசம் கொண்டு வர முடிந்தது. இதை தான் 1பேதுரு 2:9,10 கூறுகிறது.

4.<u>நாம் கடந்த காலத்தை மறக்க வேண்டும்.</u> அந்நாட்களின் வழக்கப்படி ஒரு மகனை சுவிகாரம் எடுக்கும் போது அவன் தன் தகப்பனை. குடும்பத்தை, வீட்டை மறக்கவேண்டும். தேவ வசனம் இதனை தெளிவாக கூறுகின்றது. சங் 45:10,11 ஆபிரகாமிற்கு வந்த அழைப்பு "வெளியே வா" நீ இருக்கும் இடத்திற்கும் உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆபிரகாம் விசுவாசித்தான் – கீழ்ப்படிந்தான், புறப்பட்டான். வாக்குறுதி கண்ணுக்கு தெரியவில்லை, வாக்கு கொடுத்தவர் உயிரோடு இருக்கிறார். இந்த உறுதியோடு கானான் அடைந்தான். இயேசுக்கிறிஸ்து தம்முடைய ஜீவனைக் கொடுத்து எம்மை தேவனின் பிள்ளைகளாக மாற்றியிருக்கிறார். எனவே எப்போதும் அவருடைய கரத்திற்குள் அடங்கி வாழுவோம்.

ஆசிரியர்

# அனலின் ஆன்மீக விருந்து

## *பாக்கியவானாக்கும் கிறிஸ்தவ வாழ்க்கை*

மத்தேயு 5:13 – 17 வரையிலான வசனங்களிலே தேவன் கிறிஸ்தவர்கள் எவ்விதமாக வாழ வேண்டுமென்கின்ற வாழ்க்கை முறையை குறித்துக் கூறுகின்றார்.

இந்த பூமியிலே தேவன் எங்களை என்ன உபயோகத்திற்காக வைத்துள்ளாரோ அந்த உபயோகத்தை நாம் இந்த பூமியிலே வாழும்வரை செய்யத்தான் வேண்டும். உப்பானது உணவுப் பதார்த்தங்களை பழுதடையவிடாது தடுக்கும். மாற்ற மடைவதை நிறுத்தும். வெளிச்சம் இருக்கும் போது எமது காரியங்களை செய்கின்றோம். உதாரணமாக படித்துக் கொண்டிருக்கும் போது வெளிச்சம் தடைப்பட்டால் படித்ததை நிறுத்தி விடுகின்றோம். மீண்டும் வெளிச்சம் வரும் போது படிக்க ஆரம்பிக்கின்றோம். எனவே உப்பு "செய்யாதே" என்ற செய்தியையும், வெளிச்சம் "செய்" என்ற செய்தியையும் தருகின்றது. கற்பனையை எடுத்துப் பார்த்தால் "செய்", "செய்யாதே" என்றே கூறுகின்றது. ஆகவே நாம் பூமிக்கு உப்பாகவும் உலகிற்கு வெளிச்சமாகவும் இருப்பதற்கு தேவன் "செய்" என்று கூறுகின்ற காரியங்களைச் செய்யவேண்டும். "செய்யாதே" என்று கூறுகின்ற காரியங்களை செய்யக் கூடாது. இவற்றை கருத்தில் கொள்ளாது எங்கள் சுய எண்ணங்களின்படி காரியங்களைச் செய்வோமாக இருந்தால் சாரமற்றுப்போன உப்பு எவ்விதமாக வெளியே கொட்டப்படுமோ, அவ்விதமாகவே நாங்களும் தேவனால் உபயோகிக்க முடியாதவர்களாக, பிரயோஜனம் அற்றவர்களாக வாழுவோம். அத்தோடு எங்களுடைய வெளிச்சம் பிரகாசிக்க மாட்டாது. மத்தேயு 5:3 – 11 வரையிலான வசனங்களில் தேவன் சில காரியங்களை கூறி அவர்கள் பாக்கியவான்கள் என கூறிய பிற்பாடே நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள். எனவும், நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் எனவும் கூறியுள்ளார். நாங்கள் பூமிக்கு உப்பாகவும், வெளிச்சமாகவும் இருப்பதற்கு அந்த பாக்கியமான காரியங்களை செய்யவேண்டும். என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

**1) ஆவியிலே எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது. (மத்தேயு 5:3)** – நாங்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களாக வாழ வேண்டும். என தேவன் எதிர் பார்க்கின்றார். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ தேவன் கிருபை அளிக்கிறார். எளிமைக்குள்ளே தான் தேவனுடைய கிருபை தங்கும். தேவனுடைய வார்த்தைகளுக்கும், அவருடைய காரியங் களைச் செய்வதற்கும் எங்களைத் தாழ்த்தி எங்களிடம் ஒன்றும் இல்லை என்ற நிலையிலே நாங்கள் வாழ வேண்டும். நீங்கள் தேவனுக்கு முன்பாக உங்களை முற்றும் தாழ்த்துங்கள்.

எங்களுடைய எல்லா காரியங்களையும் ஆராய்ந்து பார்த்து சீர்பொருந்துகின்ற நிலை ஆவிக்குரிய எளிமையாகும். அன்று இயேசு இரண்டு கள்வர்களுக்கு நடுவே அறையப்பட்டார். அந்த கள்வனில் ஒருவன் ஆண்டவரே என்னை நினைத்துக்கொள்ளும் என்றான். அவன் எளிமையுள்ள ஒருவனாக இருந்தான். அவர் தேவனுடைய குமாரன் என்பதை அந்த கள்வன் நன்கு அறிந்திருந்தான். அவரால் மாத்திரமே தன்னை இரட்சித்துக்கொள்ள முடியும் என்பதையும் அவன் நன்கு அறிந்திருந்த படியால் அவருக்கு முன்பாக தன் எளிமையை காண்பித்தான். இதன் நிமித்தம் அவன் பரலோக இராஜ்ஜியத்தை பெற்றுக்கொண்டான். இதே போன்று இருவர் ஜெபிக்க சென்ற சம்பவத்தை லூக்கா 18ம் அதிகாரத்திலே நாம் காண்கின்றோம். லூக்கா 18: 10 – 14 பரிசேயன் நின்று தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுசரைப்போலவும் இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன் என்றும், உபவாசம் இருக்கின்றேன், தசமபாகம் கொடுக்கின்றேன் என்றும் ஜெபித்தார். ஆனால் ஆயக்காரனோ தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்க துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாய் இரும் என்று ஜெபித்தார். தேவனுடைய பார்வையில் அந்த பரிசேயன் அல்ல, இந்த ஆயக்காரனே நீதிமானாகப் பட்டவனாய் தன் வீட்டிற்கு திரும்பிப்போனான். அந்த பரிசேயன் தன்னுடைய பெருமை களைக் கூறி ஜெபித்தான். இந்த ஆயக்காரனோ தான் பாவி எனக் கூறி தன்னை முற்றிலும் தேவனுக்கு முன்பாக தாழ்த்தினான். இந்த ஆயக்காரனைப் போலவே கிறிஸ்தவர்களாகிய நாங்களும் ஆவியில் எளிமையுள்ளவர்களாக வாழ வேண்டும். நாங்கள் எம்மை தாழ்த்துகின்ற போதே தேவன் எங்களை உயர்த்துவார். எங்கள் பேச்சுக்கள், நடத்தைகள், சிந்திக்கின்ற சிந்தனைகள், எல்லாவற்றிலும் தாழ்மையுடன் கூடிய ஆவிக்குரிய எளிமை காணப்பட வேண்டும். இன்று எங்களை தாழ்த்தி பணிவுடன் கூடிய அந்த ஆவிக்குரிய எளிமையை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வோம்.

**2. துயரப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள (மத்தேயு 5:4)** – கிறிஸ்தவர்களாகிய நாங்கள் துயரப்படுகின்றவர்களாக இருந்தால் நாங்கள் தேவனுடைய பார்வையிலேயே பாக்கிய வான்கள். உலகத்தில் துயரப்படுகின் றவர்களை பாக்கியவான்கள் என்று சொல்ல மாட்டார்கள், ஆனால் இயேசு இங்கேயும் உலகத்தின் பெறுமானங்களுக்கு எதிராகவே பேசுகின்றார். ஏனெனில் உலக இராஜ்ஜியம் வேறு, தேவ இராஜ்ஜியம் வேறு. தேவன் துயரப்படுகின்றவர்கள் எனக் கூறும் போது இரண்டு வகையான துயரங்களைக் கூறுகின்றார். (1) தன் பாவத்தை குறித்து துயரப்படுதல் (2) மற்றவர்களுடைய துயரத்திற்காக துயரப்படுதல். முதலாவதாக கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எங்களு டைய பாவத்தை குறித்த உணர்வடைந்து அதற்காகத் துயரப்படுகின்றவர்களாக இருக்க வேண்டும். **பாவ உணர்வற்ற எவருமே மெய்யான ஆறுதலைப் பெற முடியாது.** நீ பாக்கியவனாய் இருக்க வேண்டுமாயிருந்தால் முதலாவதாக உன் பாவத்தை குறித்து துயரப்பட வேண்டும். அந்த துயரம் தேவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். தன் பாவங்களை மறைக்கின்றவன் வாழ்வடைய மாட்டான். அவற்றை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீங்கள் தேவனிடமிருந்து ஆறுதலை பெற வேண்டுமாயிருந்தால் நீங்கள் தேவ னுக்கு பிரியமில்லாமல் செய்த எல்லா பாவங்களையும் அறிக்கை செய்து விட்டு விடுங்கள். நீங்கள் உங்கள் வார்த்தையால், செய்கையால், சிந்தனையால், நடத்தையால பாவம்

செய்திருந்தால் அதற்காக துயரப்படுங்கள். தாவீது ஒரு ராஜாவாக இருந்தும் அவன் ஆவியிலே எளிமையுள்ளவனாக இருந்த படியால், நான் பாவம் செய்தேன் என துயரப்பட்டான். இந்த அறிக்கையையே தேவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். எனவே முதலாவதாக உங்கள் பாவத்தை குறித்தத் துயரப்படுங்கள்.

இரண்டாவதாக மற்றவர்களுக்காக துயரப்படுங்கள். இயேசு எருசலேமைப்பார்த்து துயரப்பட்டார். லாசருவின் சம்பவத்திலே லாசருவின் குடும்பத்தை பார்த்து கண்ணீர் விட்டார். மற்றவர்களுக்காக மனதுருகினார். அவருடைய பிள்ளைகளாகிய நாங்களும் மற்றவர்களுடைய துயரமான நேரங்களிலே அவர்களுடன் சேர்ந்து துயரப்பட வேண்டும். இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த காலத்தில் மற்றவர்களுடைய வேதனைகளில் அவர்களுக்கு உதவி செய்து அவர்களை அந்த துயரத்தில் இருந்து தூக்கி விடுவிப்பராகவே வாழ்ந்தார். இயேசு எமக்காகவே துயரப்பட்டார், பாடுகள் அனுபவித்தார், எமக்காக மரித்தார். என்ன நடந்தது மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார், ஆறுதல் அடைந்தார், மற்றவர்களுடைய துயரமான வேளைகளிலே அவர்களை நாடிச் சென்று அவர்களுக்கு இயேசுவின் அன்பின் வார்த்தைகளைக் கூறி அவர்களின் வார்த்தைகளை எங்கள் துயரங்களாக கருதவேண்டும். இன்னொருவருடைய குறைவை எமது குறைவாக கருத வேண்டும். மற்றவர்களுக்காக நீங்கள் பாடனுபவிக்கிற போது தேவன் உங்களைப் பார்த்து சந்தோஷப்படுவார். எனவே உங்கள் பாவங்களுக்காக துயரப்படுங்கள். இரண்டாவதாக மற்றவர்களுடைய துயரத்திலே பங்கெடுத்து அவர்களுக்காக பாடனுபவிப்பீர்களாக இருந்தால் தேவனுடைய ஆறுதலை பெறுவீர்கள்.

**3. சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள (மத்தேயு 5:5)** – சாந்தமென்று நாம் கூறும் போது கீழ்ப்படிவு, எளிமை, மென்மை இவையெல்லாம் சேர்ந்தது தான் சாந்தமாகும். கிறிஸ்தவர்களாகிய எங்களுடைய சாந்த குணம் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். இந்த தன்மைகள் எங்களிடம் இல்லாவிட்டால் நாங்கள் முரட்டாட்டம் பண்ணுகிறவர்களாகவே இருப்போம். நாங்கள் சாந்த குணம் உள்ளவர்களாக இருந்தால் போதகர் கூறும் வார்த்தைகளுக்கு எளிமையோடு கூடிய மென்மையைத் தரித்தவர்களாய் எங்கள் சாந்த குணத்தை அவர்களுக்குக் காண்பிப்போம். சாந்த குணம் இருந்தால் பெற்றோருக்கு பிள்ளைகள் கீழ்ப்படிந்து வாழ்வார்கள், மனைவி கணவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்வார். நாங்கள் சாந்த குணம் உள்ளவர்களாக வாழும் போது அநேக ஆத்துமாக்களை தேவனுக்காக ஆதாயம் செய்து கொள்ள முடியும். ஒரு ஊழியக்காரன் தான் ஊழியம் செய்யப் புறப்படும் போது தன் மனைவியிடம் சென்று, "நான் போய் வருகிறேன்" எனக் கூறியபோது; கோபத்தோடு பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த மனைவி சாம்பல்த் தண்ணீரை அவர் மேலாக எற்றினாள். அந்த ஊழியக்காரன் ஒன்றுமே கதைக்காது சென்று, குளித்து மறுபடியுமாக உடையை அணிந்து தன் மனைவியிடம் வந்து, போய் வருகிறேன் எனக் கூறிய போது அந்த மனைவி அன்றைய தினமே இரட்சிக்கப்பட்டாள். அந்தக் கணவன் தன்னுடைய **சாந்த குணத்தின் நிமித்தமாக தன் மனைவியை சுதந்தரித்துக் கொண்டார்.** இது போல நாமும் சாந்தகுணமுடையவர்களாக இருந்தால் கணவன்மார் மனைவிமாரையும், மனைவிமார் கணவன்மாரையும், பெற்றோர் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோரையும் சாந்தமுள்ளவர்களானால் அயல் வீடுகளையும், கிராமங்களையும், பட்டணத்தையும், தேசத்தையும் சுதந்தரித்துக் கொள்ளலாம். சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

**4. நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள (மத்தேயு 5:6)** – உத்தமத்தில் உருக்குலையாத நிலை தான் நீதி. நாங்கள் நீதியுள்ளவர்களாக இருந்தால் ஒரு போதும் அநீதி செய்ய மாட்டோம். கிறிஸ்தவர்களாகிய எமக்கு எப்போதுமே நீதியின் மேல் பசிதாகம் இருக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்கு அநீதி செய்ய நினைக்க மாட்டோம். மாறாக அவர்களுக்கு நீதி செய்யவே நாடுவோம். **நாங்கள் நீதியுள்ளவர்களாக இருந்தால் அநீதியோ, அல்லது குற்றமோ செய்தால் எங்கள் இருதயத்தில் குற்ற உணர்வு காணப்படும். சமாதானமோ, திருப்தியோ இருக்க மாட்டாது.** எங்கள் தேவன் நீதியுள்ள நியாயாதிபதியாக இருக்கிறபடியால் நாமும் நீதியை விரும்பி அநீதியை வெறுக்கிறவர்களாகவே வாழ வேண்டும். உலகத்தின் பார்வையில் நீதியாய்த் தோன்றுகின்ற காரியங்கள் தேவனுடைய பார்வையில் அநீதியாய்த் தோன்றும். எனவே அவருடைய பிள்ளைகளாகிய நாம் உலகத்துக்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுக்கு என்னென்ன காரியங்கள் அநீதியாகத் தோன்றுகின்றதோ அந்தக் காரியங்களை இனங்கண்டு அவற்றை விட்டுவிட வேண்டும். உலகத்தில் அநீதி இளைப்பவர்கள் இருந்தாலும் நாம் நீதி செய்கிறவர்களாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய பெறுமானம். தேவனுடைய காரியங்களைச் செய்வதற்கு எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாகவும், ஆவலுள்ளவர்களாகவும் பசி, தாகம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். போதகர் இது சரி, பிழையென சொல்வது நீதியின் மேலுள்ள பசிதாகத்தினாலேயே, அதைப் பசிதாகத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போது திருப்தியடைவீர்கள். **உங்களுக்கு தேவன் தருகின்ற நீதியான ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள். முடிவிலே அது உங்களைத் திருப்தி செய்யும்.**

**05. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் - (மத்தேயு 5:7)** – இரக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயிருந்தால் இரக்கம் முதலாவது உங்களுக்குள் இருக்க வேண்டும். இந்த இரக்கம் இருந்தால் மாத்திரமே இரக்கம் பெற முடியும். இரக்கம் என்று கூறுகின்ற போது மனதுருக்கமும், தயவும் சேர்ந்த ஒரு செயல்.

கிறிஸ்து எங்களுக்கு இரக்கம் காண்பித்தார். அதனாலேயே நாங்கள் இரக்கம் பெற்றோம். அவர் எப்படி எமக்கு இரக்கம் காண்பித்தார், அவருக்குள்ளேயே இரக்கம் இருந்தது. அதை எமக்குத் தந்தார். வேதாகமத்திலே மிகச் சிறந்த இரக்கம் உள்ள ஒரு மனிதனாக நல்ல சமாரியனை காணலாம். (லூக்கா 10:33 – 35) முன், பின் தெரியாத ஒரு மனிதன் அடிபட்டுக் கிடக்கின்றான். குற்றுயிராய் வேதனையோடு உயிருக்காய் போராடிக் கொண்டு கிடக்கிறான். ஆனால் ஒரு போதுமே அவனை அறிந்திராத இந்த மனிதன், எப்போதுமே அவனோடு பேசியிராத இந்த மனிதன், செய்கிற காரியம், கிட்ட வந்து, அவனைக் கண்டு மனதுருகினான். **இந்த இரக்கம் என்ன செய்தது? அறியாத ஒருவனுக்கு உதவி செய்யும்படியாய் அவனை ஏவியது. அவன் வாழ்வடையும்படியாய், அவனுக்குக் காரியத்தைச் செய்யும்படியாய் அவனுடைய கரங்கள் துடித்தது. அவனுடைய ஜீவன் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காய் அவனிடத்தில் கிட்டவாக அருகாய்ச் சென்றான். இரக்கமுள்ளவர்கள் எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவி செய்யும்படியாய் கிட்டப் போவார்கள்.** இந்த சமாரியன் கிட்ட வந்து அவனுடைய காயங்களுக்கு எண்ணெயும், திராட்சை ரசமும் வார்த்தான். இந்த எண்ணெய் பரிசுத்தாவியானவருக்கு அடையாளம், திராட்சை ரசத்துக்கு அநேக அடையாளங்கள் உண்டு. அதில் ஒன்று சந்தோஷம், மகிழ்ச்சி, இந்த சமாரியன் பரிசுத்தாவியானவராலும் இந்த ஆவியியானவருடைய மகிழ்ச்சியினாலும், சந்தோஷத்தினாலும் நிறைந்திருந்தபடியினால் அவன் குற்றுயிராய்க் கிடந்தவனுக்கு அதைக்

கொடுக்கக் கூடியதாய் இருந்தது. பிரதி உபகாரம் எதிர் பாராத இரக்கமுள்ளவர்கள் பரிசுத் தாவியினால் எப்பொழுதும் நிறைந்திருப்பார்கள். இந்த இரக்கம் எவ்வளவாய் மேன்மை பாராட்டுகிறது. ஜீவன் இழக்கப்பட இருந்த ஒருவனுக்கு இந்த இரக்கம் மறுபடியும் ஜீவனைக் கொடுத்தது. நாம் இரக்கமுள்ளவர்களாயிருந்தால் எத்தனையோ பேர் தேவனுக் குள்ளாய் மறுபடி ஜீவனடைவார்கள், இரக்கம் உள்ளவர்களாய் இருந்தால் வாழ் வடைகிற எத்தனையோ ஆத்துமாக்களை எங்கள் கண்கள் காணும். நாங்கள் எங்களுக்கு உள்ளேயே இரக்கத்தை வைத்திருந்தால் இரக்கம் எப்படியானது என்று எப்பொழுதுமே அனுபவித்துக் கொண்டிருக்க முடியும். இயேசு இரக்கமுள்ளவராய் இருந்தபடியால் அவர் இரக்கம் செய்தார். எனவே நாம் பெற்றுக் கொண்ட இரக்கத்தை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். மன்னிப்பை தேவனிடமிருந்து பெற்ற நாம் மற்றவர்களுக்கு மன்னிப்புக் கொடுக்க வேண்டும். இவை யெல்லாம் இரக்கத்தினாலே வருகிற காரியம். இயேசு எங்களுடைய எத்தனையோ பாவத்தை மன்னித்து விட்டார். ஆனால் நாம் வேறு ஒருவருடைய பாவத்தை மன்னிக்க முடியாமல் இருக்கிறோம். ஏன்? எங்களிடத்தில் இரக்கம் இல்லை, நாம் மற்றவர்களுக்கு புத்துயிர் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் நாம் நியாயத்தீர்ப்பு நாளிலே கைவிடப்படுவோம். எனவே இரக்கமே மேன்மை பாராட்டும். நீங்கள் இரக்கம் காண்பித்திருந்தால் தேவன் உங்களுக்கு இரங்குவார். தேவன் சொன்னார், நான் சிறைச்சாலையில் இருந்தேன் நீங்கள் என்னை வந்து பார்க்கவில்லை, நான் பசியோடு இருந்தேன் ஆகாரம் தரவில்லை, நிர்வாணியாயிருந்தேன் எனக்கு நீங்கள் வஸ்திரம் கொடுக்கவில்லை. பிரியமானவர்களே, இரக்கம் இருந்தால் நாம் இவை எல்லாவற்றையும் செய்வோம். நியாயத்தீர்ப்பிலே தேவனிடமிருந்து இரக்கத்தைப் பெறுவோம். எனவே நல்ல சமாரியன் போன்று குற்றுயிராய் கிடக்கிற ஆத்துமாக்களை தேவன் பக்கமாய் கொண்டு வரும்படியாக இரக்கம் செய்வோம்.

**6) இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் (மத்தேயு 5:8)** - வேதாகமம் முழுவதையும் நாம் பார்க்கும் போது ஆண்டவர் கூறிய ஒரு அருமையான காரியம் "நான் பரிசுத்தர் ஆகவே நீங்களும் பரிசுத்தராயிருங்கள்." அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னான், நீங்கள் என்னைப் பின்பற்றி தேவனை மகிமைப்படுத்துங்கள். இதை நாங்கள் எங்கள் வீடுகளிலே என்னைப் பார்த்து நீங்கள் தேவனுக்குச் சாட்சியாய் வாழுங்கள் என்று கூற முடியுமா? அப்படிச் சொன்னால் அது பெரிய ஒரு செயல். **எங்களுடைய இருதயம் சுத்தமாயிருந்தால் நாங்கள் எந்த இடத்திலும் தேவனுக்குச் சாட்சியாய் இருப்போம்.** இருதயம் ஒழிவு மறைவு அற்று இருக்க வேண்டும். மறைவான பாவங்கள் இருக்கக் கூடாது. நீங்கள் தேவனுக்கு சாட்சியாய் இருக்க வேண்டுமென்றால் இருதயத்திலே சுத்தமாயிருங்கள். இந்த இருதய சுத்தமுள்ளவர்களே தேவனை தரிசிப்பார்கள். தேவனைத் தரிசிப்பதென்று கூறும் போது முதலாவது பூமியில் வாழும் போது தேவனைத் தரிசிப்பது. அடுத்தது, நிரந்தரமாய் தேவனைப் பரலோகத்தில் தரிசித்துக் கொண்டிருப்பது. இங்கே நாம் தேவனைத் தரிசிக்காமல் விட்டால் பரலோகத்தில் தேவனைத் தரிசிக்க மாட்டோம். ஒரு நாடகத்தை அரங்கேற்றும் போது முதல் ஒத்திகை ஒன்று வைப்பார்கள். அந்த ஒத்திகையில் ஏதாவது பிழை ஏற்பட்டால் அதைத் திருப்பிப் பார்த்து சரிசெய்வோம். எங்களுக்குச் சரியாய்த் தோன்றும் வரைக்கும் அதை மீண்டும் மீண்டும் செய்வோம். இது போல நாம் பரலோகத்திலே தேவனைத் தரிசிக்க முதல், பூமியிலே தேவனைத் தரிசிக்க வேண்டும். **எப்படிப் பூமியில் தேவனைத் தரிசிப்பது? எவர்கள் தேவனுடைய வார்த்தைகளையெல்லாம் கைக் கொள்ளுகிறார்களோ அந்த வார்த**

**தைக்கூடாக அவர்கள் ஒவ்வொரும் தேவனைத் தரிசிக்கிறார்கள்.** (யோவான் 1:1 வெளிப்படுத்தல் 19:13) ஏனென்றால், இயேசு தான் அந்த வார்த்தை. **நாம் தேவனுடைய வார்த்தையை அனுதினமும் கைக்கொள்ளுகிற போது தேவனை தரிசிக்கிறோம். வார்த்தை தான் தேவன், தேவன் தான் வார்த்தை.** தேவன் கூறுகிற வண்ணமே எல்லாக் காரியங்களையும் செய்து அவருடைய வார்த்தையைக் கைக் கொண்டால் இறுதியாக ஒரு நாள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாய் இருந்து தேவனை முகமுகமாயத் தரிசிப்பீர்கள். அந்த சலாக்கியம் உங்களுக்கு வேண்டுமென்றால் தேவனுடைய வார்த்தையைக் கைக் கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தையின்படி தொடர்ந்து ஜீவிக்க, ஜீவிக்க அது எங்களை தேவனை எதிர்பார்க்கும் ஒரு பரிசுத்த தரத்துக்குள்ளாய் கொண்டு வரும். இந்த வார்த்தையின்படி வாழ, வாழ இந்த வார்த்தை எங்களைப் பரிசுத்தமாக்கும். பரிசுத்தம் என்றால் என்ன? தேவனுடைய வார்த்தையின்படி வாழுவது பரிசுத்தம். தேவனுடைய வார்த்தையின்படி நாங்கள் வாழ்ந்தால் அவரைத் தரிசிக்கலாம். இருதயத்தில் சுத்தம் எங்களுக்கு இப்பொழுது வேண்டும். ஏனென்றால் நாங்கள் பரலோகத்திலே தேவனைத் தொடர்ந்து தரிசிப்பதற்கும் தேவனுடைய வார்த்தைக் கூடாய் தேவனைத் தரிசிப்பதற்கும். எனவே எந்த ஒரு மறைவான பாவமும் எங்களிடத்தில் இருக்கக் கூடாது. சங்கீதம் 19:12 இந்த மறைவான குற்றம் எங்கள் இருதய சுத்தத்தை பெரிய அளவில் பாதிக்கும். அது எவருக்கும் தெரியாது. அது அதற்குள்ளேயே இருந்து எல்லா இடமும் பரவி விடும். தாவீது ராஜா சொல்லுகிறான், **ஆண்டவரே மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.** ஏசாயா முதல் ஐந்து அதிகாரங்களிலும் ஊழியம் செய்து கொண்டு வந்தான். 6வது அதிகாரத்திலே சொன்னார், நான் அசுத்த உதடுள்ள மனுஷன். அப்பொழுது தான் அவன், தேவனுடைய திட்டத்தைக் கண்டு கொண்டான். அதன் பிற்பாடு பார்த்தால் அவன் 66 அதிகாரங்கள் தேவனுக்காய் தேவனுடைய வாயாய் இருந்தான். தேவன் பயன்படுத்த வேண்டுமாயிருந்தால் இருதயத்திலே சுத்தமுள்ளவர்களாய் வாழ வேண்டும். **பிரசங்கி 10:1 தைலக்காரனுடைய தைலக் குப்பியை ஒரு செத்த ஈ கெட்டுப் போகப்பண்ணும்.** வாழ்க்கை முழுவதும் நன்றாய் இருந்தாலும் ஒரே ஒரு பாவம் இருதயத்தின் சுத்தத்தைக் கெடுத்துப் போடும். உங்கள் வாழ்வில் மறைவான பாவம் இருந்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள். அப்பொழுது தேவனை தரிசிக்கலாம்.

**7) சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள். மத்தேயு 5:9** - தேவனுடைய புத்திரர் சமாதானமாய் இருப்பார்கள். இயேசுவை நாம் பார்த்தால் அவர் இந்த உலகத்தில் இருந்து ஊழியம் செய்து, மரித்து, உயிரோடு எழுந்ததின் பிற்பாடு எங்கள் எல்லாருக்கும் வைத்துப் போன காரியம் ஒன்று அவருடைய சமாதானம். ஆண்டவர் வைத்திருந்த அந்த சமாதானத்தை அவர் சிலுவையில் தொங்கின போது கூட சத்துருவால் உடைக்க முடியவில்லை, அவர் ஏன் வந்தார்? என்ன நோக்கத்தோடு வந்தார்? என அவருக்கு நன்றாய் தெரியும். ஆனால் சத்துரு எல்லா விதத்திலும் தாக்கிப் பார்த்தும் அவருடைய சமாதானம் உடைந்து போகவில்லை. கெத்சமெனே தோட்டத்தில் சொன்னார்; பிதாவே என்னுடைய சித்தப்படி அல்ல உம்முடைய சித்தப்படி ஆகட்டும். அவருடைய சமாதானம் குறைந்து போகவில்லை. அப்படியான சமாதானத்தைக் கொண்டிருப்பவர்களே இன்னொருவரை சமாதானப்படுத்த முடியும். இந்த உலகம் மிகவும் பயங்கரமான சூழ்நிலைக்குள்ளாய் கடந்து போய்க் கொண்டிருக்கிறது. தேவனை எவ்வளவாய் மறக்க செய்ய முடியுமோ அவ்வளவாய் சத்துரு தேவனை மறக்கச் செய்யும் செயல்களை செய்து கொண்டு வருகிறான். இந்த நாட்களில் அப்படி இழுப்புண்டு போகாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால் நாங்கள் தேவனிடமிருந்து பெற்ற அந்த

சமாதானத்தைக் காத்துக்கொண்டு, மற்றவர்களை அந்த சமாதானத்துக்குள் நடத்த வேண்டும். **நாங்கள் மற்றவர்களைக் கட்ட வேண்டுமானால் எங்களிடம் முதலாவதாக சமாதானம இருக்க வேண்டும்.** மற்றவர்கள் தேவனை ஏற்றுக் கொள்ள எங்கள் சமாதானம் சாட்சியாய் இருக்க வேண்டும். முதல் நாங்கள் எமக்குள் சமாதானமாய் இருக்க வேண்டும். அடுத்து நாங்கள் ஒருவருக்கொருவர் சமாதானமாய் இருப்பது, நாங்கள் எல்லாரும் ஒரு இடத்தில் இருக்கப் போகின்ற படியால் இங்கே சமாதானமாய் இருக்க வேண்டும் (ரோமர் 12:18) உங்களால் கூடுமானவரை என்று கூறும் போது; நீங்கள் ஒருவரோடு சமாதானமாயிருக் கிறீர்கள், அவர்கள் சமாதானமாக இருக்க முடியாது என்று உங்களை விரட்டும் போது அவர்க ளோடு சமாதானமாய் இருப்பதே, உங்களால் கூடுமானவரை சமாதானமாய் இருப்பதாகும். சீன தேசத்தில் 2 மனிதர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நபர் கிறிஸ்தவன், மற்றையவர் கிறிஸ் துவை அறியாதவர். இருவருக்கும் வயல் நிலங்கள் இருந்தன. கிறிஸ்தவ நபருடைய வயல் நிலம் சற்று மேடான இடத்தில் இருந்தது. கிறிஸ்துவை அறியாதவனுடைய நிலம் சற்றுப் பதிவாக இருந்தது. ஒரு முறை கிறிஸ்தவ மனிதன் தனது வயலுக்கு நீர் இறைத்து வயல் நிறைந்ததும் வீட்டிற்குச் சென்று விட்டார். சிறிது நேரத்தின் பின் கிறிஸ்துவை அறியாதவர் வந்து பார்த்த போது கிறிஸ்தவனுடைய வயல் நிரம்பியிருந்தது. தனது வயலுக்கு நீர் இறைக்க வேண்டியிருந்தது. எனவே இவர் கிறிஸ்தவனுடைய வயலின் வரம்பை உடைத்து விட்டார். முழு நீரும் பதிவாக இருந்த அவருடைய வயலுக்கு வந்தது. கிறிஸ்தவன் வந்து பார்த்த போது அவன் வயல் காய்ந்திருப்பதையும் கிறிஸ்துவை அறியாத நபருடைய வயல் நிறைந்திருந்ததையும் பார்த்தார். பொறுமையாக சென்று விட்டார். இவ்வாறு மூன்று முறை நடைபெற்றது. மிகவும் வேதனையுடன் கிறிஸ்தவன் ஆலோசனை பெறும்படி தனது போதகரை சந்திக்கப் போனான். அங்கே அவருடைய போதகர் சொன்னார். “ இதைவிட மேலானதைச் செய்” என்று சொன்னார். அவன் இதைவிட என்ன மேலானது உள்ளது என யோசித்தான். மறுநாள் கிறிஸ்துவை அறியாதவனுடைய வயலுக்குச் சென்று நீர் இறைத்துவிட்டு, பின் தன் வயலுக்கு நீர் இறைத்து விட்டு, வீட்டுக்குச் சென்று விட்டான். பின்பு கிறிஸ்துவை அறியாதவன் வந்து பார்த்த போது அதிர்ச்சியடைந்தான். கிறிஸ்தவனுடைய வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தான் கிறிஸ்தவனிடம் சென்று எப்படி உனக்கு செய்ய முடிந்தது. அதன் இரகசியம் என்ன? என்று கேட்டு இயேசுவை ஏற்றுக் கொண்டான். இயேசுவை ஏற்றுக் கொள்ள காரணம் கிறிஸ்தவன் சமாதானத்தை கிறிஸ்துவுக்குள் இழக்காமல் இருந்ததே. அவன் அன்றைய தினம் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்று ஒரு ஊழியனாக மாறினான். எவ்வளவாய் உங்களைமற்றவர்கள் எதிர்த்தாலும் அவர்களோடு சமாதானமாய் இருங்கள். அப்போது அவர்கள் உங்களை தேடி வருவார்கள். எங்கள் எல்லா சமாதான ஐக்கியக்கட்டும் சேர்ந்து ஒரு நாள் பிதாவானவருக்கு முன்பாக ஒருமனப்பட்டு அவரை ஆராதிக்கமுடியும். ஒரு ஆய்விலே கூறப்பட்டிருக்கிறது. கூடுதலாக ஆலயங்களிலே இரட்சிக்கப்பட்டிருப்பவர்களை பார்த்தால், பெரியசுவிஷேசக் கூட்டங்களிலே இரட்சிக்கப்பட்டவர்கள் ஆலயங்களிலே நிலைத்திருப்பதைப் பார்க்கிலும், ஒவ்வொரு விசுவாசியும், சமாதானத்தை காண்பித்ததின் மூலமாய் ஆலயத்துக்கு வந்தவர் களே இன்று தேவனோடு அதிகமாய் உறவு வைத்திருக்கிறார்கள். இயேசு சமாதானம் பண்ணினார். அவர் பிதாவின் குமாரன், நாமும் சமாதானம் உள்ளவர்களாய் இருப்போம், ஏனெனில் நாம் தேவனுடைய பிள்ளைகள்.

**8) நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் பரலோக இராஜ்ஜியம் அவர்களுடையது. (மத்தேயு 5:10)** – நாம் மூன்றாவது வசனத்தில் பார்த்தோம், ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது; என ஆரம்பித்து தொடர்ந்துவருகிற வார்த்தையிலும் தேவன் பல காரியங்களை கூறி, இப்பொழுதும் இரண்டாவது தடவையாகவும் 10வது வசனத்தில் இதைக்கூறுகிறார். **ஆரம்பமும் பரலோகம், முடிவும் பரலோகம். பரலோகத் துக்கான ஓட்டத்தை ஆரம்பித்த நாங்கள் பரலோகத்திலே ஓட்டத்தை முடிக்க வேண்டும் இடையில் முடிக்கக்கூடாது. ஆவியில் ஆரம்பித்த நாம் ஆவியிலே முடிக்க வேண்டும். அநீதியின் நிமித்தம் வரும் துன்பம் நமக்கு வேதனையைத் தரும். நீதியின் நிமித்தம் வரும் துன்பம் பரலோகத்தைத் தரும்.** நீங்கள் நீதியின் நிமித்தம் துன்பப்பட்டால் பரலோக ராஜ்ஜியத்துக்கு உரியவர்கள். 4வது வசனத்தில் கூறப்பட்டுள்ள துயரப்படுத்தல், நமது பாவத்துக்காகவும், மற்றவர்களுக்காகவும் துயரப்படுதல். இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள **துயரப்படுதல் பாவம் செய்வதற்கு முன்பாக நான் பாவம் செய்யமாட்டேன் என ஒரு வரம்பை போடுதல். இது தான் நீதியின் நிமித்தம் துன்ப்பப்படுதல். தேவனுக்காய் நீங்கள் பரிசுத்தமாய் வாழ தீர்மானித்தால் அநேக துன்பங்கள் வரும். வேதனைகளை அனுபவித்து பரிசுத்தத்தை காத்துக்கொண்டால் பரலோகராட்சியம் உங்களுடையது.** உங்களுடைய பெற்றோர் இரட்சிக்கப்படாத நபர்களை திருமணம் பேசி அவர்கள் பிற்பாடு இரட்சிக்கப்படுவார்கள் என கூறி உங்களுக்கு திருமணம் செய்து வைக்க முற்பட்டால் அதற்கு இடமளிக்காது அந்தப் பிரச்சினைக்கு வரம்பை வைக்க வேண்டும். நீங்கள் பாவத்தை நெருங்காமல் அதற்கு எதிராக போராட வேண்டும். இயேசுவின் நிமித்தம், அவருடைய வார்த்தையின் நிமித்தம் துன்பம் வரும். துன்பங்களுக்கு ஊடாக சென்று தேவனைக் காணலாம். பரலோகத்துக்கு போகும் வழி இடுக்கமும், ஒடுக்கமும் கரடு முரடுமானது. நீங்கள் நீதியின் நிமித்தம் படும் துன்பங்களுக்கு தேவன் சீக்கிரத்தில் பதில் தருவார். யோசேப்பு பாவம செய்யாதபடி தன்னை காத்து கொண்டதன் நிமித்தம் சிறையிலே போடப்பட்டான். நான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என வேலி அடைத்தான். இதன் நிமித்தம் அவனுக்கு துன்பங்கள் வந்தது தான் ஆனால முடிவிலே அவன் ஆசீர்வாதம் உள்ளவனாய் இருந்து, ஆகாரம் கொடுக்கிற அறுவடையின் வேலையைச் செய்தான். நீங்கள் செய்யாத குற்றத்துக்காய் தண்டனை பெற்றுக் கொண்டிருந்தால் நீங்கள் நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறீர்கள். யோசேபின் நீதி வெளிப்பட்டபோது பார்வோன் அசந்து போனான். இது போல உங்கள் நீதி வெளிப்படும் போது அநேகர் தேவன் பங்கமாக வருவார்கள்.

**மத்தேயு 5:11, 12 உங்களுக்கு வருகின்ற எல்லா நிந்தையான பேச்சுக்கள், பாடுகள் எல்லாவற்றையும் சகித்தால் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்.** தேவன் செய் என்பதை செய்து, செய்யாதே என்கிற காரியத்தை செய்யாது விடும போது நீங்கள் உலகத்துக்கு வெளிச்சம், பூமிக்கு உப்பு. எனவே உங்களுக்கு எந்த நிலை வந்தாலும் தேவ வார்த்தைப்படி வாழ உங்களை அர்ப்பணியுங்கள். உங்கள் வாழ்க்கைக்குள் இவ் 8 காரியங்களையும் கொண்டு வாருங்கள். அப்போது உங்கள் வாழ்க்கை தேவனுக்கு பிரியமாக அமையும். நீங்கள் பாக்கியவானாகலாம்.

**வே. மகாராஜா**

# மூவரி

முத்துக்கள்

எரியும் திரியின்
எண்ணெயே
எழுப்புதல்

உயிருக்குள்
உறைவது
உண்மைகள்

ஏற்றிடும் போதினில்
எகிறுவது
பெருமை

ஒன்றாயிருப்பது
ஒற்றுமையின்
இரகசியம்

கலப்பற்ற பரிசுத்த
புத்தகம்
வேதம்

ஏகமாய் திறந்த
ஓர் வாசல்
சிலுவை

தேடித் தேடி
அடைவது
பரிசுத்தம்

உணரவைக்கும்
உண்மைகள் உள்ள
இடம் சிலுவை

தேவைகளை
மறைப்பது
தேவனின் செயல்

பதறிடும் மனதை
திருத்துவது
பாடுகளே




பிரியமான வாலிப சகோதரர்களே ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

எதையும் சீக்கிரமாய் அடைந்து விட வேண்டும். என துடியாய் துடிக்கும் பருவமே இளமைப்பருவமாகும். இதில் இயேசுவை அறியாத உள்ளங்கள் இன்னும் அதிகமாய் தங்களது திட்டங்களை அடைந்து விட பல வழிகளையும் வாஞ்சிக்கின்றார்கள். இதில் என்னதவறு இருக்கின்றது என்று தங்களுக்கு தாங்களே கேள்விகளையும் எழுப்பி பதிலுரைத்தும் இறுதியில் தங்கள் மனவிருப்பப்படியே அடிகளை, செயல்களை அமைத்துக் கொள்கின்றனர்.

ஒரு தகப்பனுக்கு கீழ்படிந்து அவரால் ஒப்படைக்கப்பட்ட வேலையை செய்து விட வாஞ்சிக்கும் ஓர் வாலிபனின் வாழ்விலிருந்து உங்களோடு பேச விரும்புகின்றேன். **அவனுக்கு சவுல் என்னும் பெயருள்ள சவுந்தரியமான ஒரு குமாரன் இருந்தான் இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சவுந்தரியவான் இல்லை எல்லாஜனங்களும் அவன் தோள்களுக்கு கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாய் இருந்தான்.** (1 சாமுவேல் 9:2)

சவுந்தரியமானவன், எல்லாஜனங்களைப்பார்க்கிலும் உயரமானவன். அனேக வாலிபர்களுக்கு ஓர் எண்ணம்; தங்களது தோற்றத்தையும் (அழகையும்) உயரத்தையும் குறித்ததாகும். நீ உன்னைக் குறித்து எந்த நிலையில் எண்ணிப்பாக்கிறாய். அனேகர் தேவன் தங்களுக்கு தந்த இயற்கையான சரீரநிலைமைகளை (அழகு, நிறம், உயரம், தலைமுடி, உடற்பருமன், சரீர உறுப்புக்களின் அமைப்பு) அவரின் நாமத்தின் மகிமைக்காக காண்பியாமல் அதைதங்களது வாழ்வில் மற்றவர்களை மருட்டவும், வசப்படுத்தவும், அலங்கரிப்பு (தேவையற்ற) செய்கின்றனர். நீ ஒரு போதும் அப்படி இராதே.

பெற்றோரைவிட நீ உயரத்தால் வளர்ந்தாலும் கூட அவர்களை மதித்து நடகனம்பண்ணு, எதிர்த்துப் பேசாதே, குடும்ப ஜெபத்தில் தரித்துஇரு. பெற்றோருக்கு

அதிகாரியாக ஒருபோதும் மாறாதே, சவுல் என்னும் வாலிபன் பெற்றோருக்கு கீழ்படிந்து உடனடியாக தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்யப்புறப்பட்டான். வேறுயாரையும் அனுப்பவில்லை. உனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட வேலையை நீயே நிறைவேற்ற முற்படு இன்னும் ஒருவரை ஏவிவிட்டு நீ நழுவிவிடாதே.

**திரும்பிப் போவோம் வா. (1 சாமுவேல் 9:5)**

கழுதைகளை காணவில்லை பல இடங்களில் தேடியும் பிடிக்கமுடியாத நிலையிலே வாலிபன் தன்னுடன் வந்த வேலைக்காரனை நோக்கி **தகப்பன் கழுதைகள் மேலுள்ள கவலையை விட்டு நமக்காக கவலைப்படாதபடிக்கு திரும்பிப் போவோம் வா**

வாலிபர்களின் வாழ்வின் ஆரம்பநிலையில் எதையும் செய்வதற்கு தீவிரம் காட்டினாலும் கூட நாட்கள் செல்லச் செல்ல பல காரணங்களைச் சொல்லி ஆரம்பித்த வேலையை இடைநடுவில் விட்டு விடவே அதிகமான வாய்ப்புண்டு. அதுகல்வியாகவோ, தொழிலாகவோ இருக்கலாம். ஏன் ஊழியமாகக் கூட இருக்கலாம். முடியாவிட்டால் திரும்பிப் போவோம் என்ற மனநிலையே அதிகரிக்கும். அதற்குள் மாட்டிக் கொள்ளாதே. சரியான உண்மையான வேலையை செய்வதற்கு சோர்ந்து போகாதே. பிறமனிதரின் கவலையை காரணமாச் சொல்லி உனக்கு ஒப்புவிக்கப்பட்ட பணியை நிராகரிக்காதே; ஆபத்தானது. இன்னெரு நபர் உங்களுக்காக கவலை கொள்ளுவார். என நீங்கள் எண்ணி அல்லது நம்பி உங்கள் பணியை விட்டுவிடாதீர்கள்.

**நம்முடைய வழியை நமக்கு தெரிவிப்பார். (1 சாமுவேல் 9:6)**

இந்தப்பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார். அவர் பெரியவர்; அவர் சொல்கிறது எல்லாம் தப்பாமல் நடக்கும். அங்கே போவோம் ஒருவேளை நாம் போகவேண்டிய வழியை நமக்கு தெரிவிப்பார் என்றான் வேலைக்காரன் வாலிபனை நோக்கி.

திரும்பிப் போவதுதான் ஒரே தீர்வு என எண்ணியவனுக்கு இல்லை முயற்சிக்க தக்கதான ஒரு வழி உண்டு என காண்பிக்கின்றான் வேலைக்காரன். பிரியமானவர்களே இனி காரியம் வாய்க்காது. என நீ முடிவுகட்டும் போது உனக்குவரும் ஆலோசனைகள் எப்போதும் தேவமனிதர்களையும், அவர்கள் காட்டும் ஆலோசனையையும் பின்பற்ற ஆயத்தம் தானா? இந்த வாலிபன் தன்னோடு வந்த வேலைக்காரன் சொன்ன நல்ல வழியில் செல்ல தன்னை கீழ்படுத்தி ஒப்புக் கொண்டான். தேவஊழியர்களிடம் செல்கிறாயா? காரியங்களை மனம்திறந்து பேசுகிறாயா? அவர்கள் சொல்லும் தேவ வார்த்தையின் படி நடப்பதற்கு மனப்பூர்வமாக ஒப்புக் கொடுக்கிறாயா? அல்லது தேவனுடைய மனுஷனைச் சந்திப்பதை அடியோடு தவிர்க்கிறாயா? கடைசியாக எப்போது ஊழியனிடம் சென்றாய்?.

**காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே. (1 சாமுவேல் 9:7 )**

காணிக்கையை குறித்து அறிவுடைய வாலிபன். தேவசமூகத்திற்கு செல்லும் போது எப்படி போகவேண்டும் என அறிந்து இருந்தவன். காணிக்கை ஒருபோதும் தேவ ஊழியர்களைச் சந்திப்பதற்கு தடையாக இருக்கக் கூடாது. ஆனால் அதை தேவன் விரும்புகின்றார்.

நீ உழைப்பாயானால் உனக்கு வரும் வருமானத்தில் தேவ ராஜ்யத்துக்கென எவ்வளவு கொடுக்கின்றாய் அல்லது அதை மறந்து விட்டாயா? ஆபேல் என்னும் வாலிபன் தன்னிடத்திலுள்ள மிகவும் சிறப்பானதை தேவனுக்கு கொடுத்தான். அவனையும் அவன் காணிக்கையையும் தேவன் அங்கிகரித்தார்.

**நான் உனக்கு சொல்லியிருந்த மனுஷன் இவனே. (1சாமுவேல் 9:17)**

உன்னை குறித்த தேவ திட்டம் உறுதிப்படுத்தப்படும் இடம்; தேவ ஊழியன் மூலமாகவும், தேவவார்த்தையூடாகவும்; சபையிலே என்பதை மறந்து விடாதே. தேவதிட்டத்தை நீ அறிந்து கொள்வதே உன் வாழ்வில் தேவசித்தமாகும். உனது வாழ்வில் தேவசித்தத்தை கண்டு கொண்டாயா? ஒன்று செய் தேவனையும் தேவமனுசர்களையும் நாடு மற்றப்படி ஏமாந்து போகாதே. **உனக்கு சரியாய் தோன்றுவதில் எப்போதும் திருப்தி கொள்ளாதே. தேவனுக்கு சரியாய் தோன்றுவதில் திருப்தி கொள் அதுவே தேவசித்தமாகும்.**

**வேலைக்காரனை முன்னே நடந்து போகச் சொல். (சாமுவேல் 9: 27)**

யாரும் தங்கள் வேலைக்காரனை பின்னாக வருவதற்கே அனுமதிப்பார்கள். அதிக தேவை ஏற்படின் அருகில் மிக முக்கியமான அவசரமான நிலையில் மட்டும் முன்னாகச் செல்ல அனுமதிப்பர்.

எப்போதும், எதற்கும் எல்லாவற்றிற்கும் முன்னாக போகவும், தங்களை காண்பிக்க வும் விருப்பம் கொண்ட பருவம். மற்றவர்களுக்கு மதிப்பளிக்கவும் மரியாதை செலுத் தவும் அதிகபட்சம் ஆர்வம் கொள்ளாத மனதையுடைய வயது எல்லையாகும்.

நீ எப்படி இருக்கிறாய்? உனக்கு கீழானவர்கள், சக நண்பர்கள் முன்னாக செல்வதற்கு அனுமதிப்பாயா? அல்லது மௌனம்சாதிக்கிறாயா? நீ தரித்து நிற்பது அவசியமானதாகும்.

**தேவ வார்த்தையை உனக்கு தெரிவிக்கும்படிக்கு. (1சாமுவேல் 9:27)**

வாலிபனாகிய சவுலின் வாழ்வில் பெரும் திருப்பத்தையே கொண்டு வந்த தேவ பகுதி இதுவாகும்.

சாமுவேல் என்னும் தேவனுடைய மனிதனால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு முன்னதாக சொல்லப்பட்ட வார்த்தை <u>நீ சற்றே தரித்து நில்</u> – அபிசேகம் இல்லாமல் இளமையில் பரிசுத்தமாய் வாழ்வது என்பது முடியாத காரியம். பாவத்திற்கு விரோதமாக வும், தேவ விருப்பத்தை நிறைவேற்றுவதற்கும் நிச்சயம் உனக்கு தேவ அபிசேகம் தேவை. அதை நீ பெற்று விட்டால் கோணலும் மாறுபாடுமான உலகத்திலே தேவனு டைய மாசற்ற பிள்ளைகளாக ஜீவனம் பண்ணலாம். நாளுக்கு நாள் வாலிபத்தை சீரழிக்கும் காட்சிகளும், காம உணர்வை தூண்டும் உல்லாச உலகத்திலே, யாரோடும் எப்போதும் தொடர்பை ஏற்படுத்தி, வேண்டிய காரியத்தை நமக்கு பிடித்த விதத்திலே குறித்த நேரத்திலே செய்து விட முடியும் இந்த நவீன உலகில்.

**அவரோடு கூட தரித்து நிற்க நீ ஒப்புக் கொடுப்பாயானால் நீயே தேவனால் பயன்படுத்தப்படும் பாத்திரம் என்பதில் சந்தேகம் இல்லை.**

சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்

**தேவநாயகம் சுமணன்.**

# கதையும் கற்றதும்

## நன்மையும் தீமையும்

ஒருமுறை இரண்டு நண்பர்கள் ஓர் பாலைவனத்தின் ஊடாக நடந்து சென்று கொண்டிருந்தனர். பல்வேறு விடயங்களையும் நிகழ்வுகளையும் குறித்து அவர்கள் தமக்கிடையே பேசிக்கொண்டு செல்லும் போது தீடீரென அவர்களுக்கு இடையிலே ஓர் கருத்து வேறுபாடு உருவானது. இரு நண்பர்களும் தமது நியாயங்களை முன்வைக்கத் தொடங்கினர். இருவரது முரண்பட்ட கருத்துக்களால் அவ்விடத்தில் ஓர் விவாதம் உருவானது. இப்படியாக அவர்கள் விவாதிக்கும் போது ஒருவர் கோபமடைந்து தன்னை கட்டுப்படுத்த முடியாதவராய் தனது நண்பனை கன்னத்திலே அறைந்தார். ஆனால் அவரது நண்பனோ எதுவும் கூறவில்லை. தனது நண்பன் தன்னை வேதனைபடுத்தியதை குறித்து அவனுடன் எதுவும் பேசவில்லை. சிறிது தூரம் சென்று மணலிலே பின்வருமாறு எழுதினான். "இன்று எனது ஆருயிர் நண்பன் என்னை கன்னத்திலே அறைந்தான்"

இப்படியான ஒரு வேதனையான சம்பவத்தின் பின் இருவருமாக மீண்டும் தமது பயணத்தை தொடர்ந்தனர். அதிக தூர பயணத்தின் பின்பு ஓர் பாலைவனச்சோலை அவர்கள் கண்களுக்கு தென்பட்டது. இருவரும் களைப்படைந்து இருந்த காரணத்தினால் அங்கிருந்த நதியில் நீராட விருப்பப்பட்டவர்களாய் சென்றனர். தீடீரென அந்த நண்பன் கால் தவறி நீருக்குள் விழுந்து உயிருக்கு போராடினான். உடனே மற்றவன் ஓடிச்சென்று அவனைக் காப்பாற்றினான். மயக்கம் தெளிந்தவன் தன்னருகே தன்னை அறைந்த நண்பன் உட்கார்ந் திருந்து தன்னை அணைத்துக் கொண்டிருப்பதை கண்டான். இருவரது கண்களிலும் கண்ணீர், சிறிது நேரத்தில் அவன் எழுந்து சென்று அருகிலிருந்த கல்லிலே பின்வருமாறு எழுதினான் "இன்று எனது ஆருயிர் நண்பன் என் உயிரைக் காப்பாற்றினான்" அப்போது அவனது நண்பன் அவனை நோக்கி "நான் உன்னை கன்னத்தில் அறைந்ததை மண்ணிலும் உன் உயிரைக் காப்பாற்றியதை கல்லிலும் ஏன் எழுதினாய்?" என்று கேட்டான் அதற்கு அவன் **"நீ என்னை வேதனைபடுத்தியதை மண்ணிலே எழுதினேன்; மன்னிப்பு என்னும் காற்று வீசும் போது அது அழிந்து மறைந்து போகும். ஆனால் அதே நேரம் நீ எனக்கு செய்த நன்மையை கல்லிலே எழுதினேன், ஏனெனில் எந்த காரணத் தைக் கொண்டும் எமக்கு செய்யப்பட்ட நன்மைகளை நாம் மறந்து போகக் கூடாது.** எந்த வகையான காற்றும் அதை எம் மனதிலிருந்து எடுத்து விடக்கூடாது" என்றான்.

ஆம்! இது எவ்வளவு உண்மையானதொரு காரியம்... தேவன் எம்மிடம் எதிர் பார்ப்பதும் இதைத்தான். மற்றவர்கள் எமக்கு செய்யும் தீமைகளை நாம் மன்னித்து மறந்து பிறர் எமக்கு செய்யும் நன்மைகளை நாம் நினைக்க வேண்டும். நன்மை செய்வதையே தேவன் விரும்புகிறார். எனவே நாம் மற்றவர்கள் எமக்கு செய்யும் தீமைகளை மண்ணிலும் நன்மைகளை அழியாத மனதிலே பதித்தும் வாழ்வோம்.

**கெ. இன்பறூபன்.**




-தொடர்ச்சி-

**கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர், இன்பருபன் அவர்களின் குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டது. பரலோகம் பற்றிய இந்த வேதப்படிப்பு இப்பகுதியில் தொடராக இடம்பெறும்.**

# 12. சுகந்தி

குடிபோதைக்காரருக்கு இதில் விடுதலை உண்டு. இது மதுபானத்தில் மயங்கி இருப்போருக்கு தேவன் கொடுக்கும் விடுதலைக்கு அடையாளம வெறியர் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை. 1கொரி 6:10 மதுபான வெறிகொண்டு வழிதவறிப் போவோருக்கு தேவன் கொடுக்கும் ஒரு வாய்ப்புத்தான் இது. ஓர் மனிதனுக்கு என்னென்ன பரிகாரம் உண்டு பண்ணிக் கொடுக்கப்பட வேண்டுமோ, அத்தனையும் உண்டு பண்ணிக் கொடுத்தார் இயேசு. இங்கு தேவன் உண்டு பண்ணியது வெறியருக்குப் பரலோக ஆனந்த பாக்கியம். கேட்பதற்கு இனிமையான நற்செய்தி இயேசு வெறியரை நேசிக்கிறார். அவர்களுக்கு விடுதலை கொடுக்க விரும்புகிறார். பரலோகம் செல்லும் வாய்ப்பையும் கொடுக்கிறார். வெறி உண்டு பண்ணும் மதுவை விற்கும் இடத்தை ஆங்கிலத்தில் “Bar” என அழைப்பார்கள். இந்த ஆங்கில பதத்திற்கு மற்றொரு அர்த்தம் உண்டு. “தடை” என்பது அந்த அர்த்தம். பரலோகத்திற்கு ஒரு தடை – ஆனால் நரகத்திற்கு ஒரு வாசல். என்ன பொருத்தமான பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். புருஷத்துவத்திற்கும், செல்வத்திற்கும் தடை; தாழ்ச்சிக்கும் சுகயீனத்துக்கும் வாசல். மதிப்புக்கும், பெருமைக்கும், புகழ்ச்சிக்கும் தடை: துயரத்திற்கும், பாவத்திற்கும், வெட்கத்திற்கும் வாசல். குடும்ப ஜெபத்திற்குத் தடை. கூச்சல் நிறைந்த, மதியற்ற, சண்டைகளுக்கு வாசல். யார் இந்தப் பொருத்தமான பெயரைக் கொடுத்தார்களோ தெரியாது. குடிப்பழக்கத்திற்கு. நீங்கள் அடிமையா? சாவு, திடீர்மரணம் உங்களை நிழல்போல் தொடர்கின்றது. அதற்கு முன்பதாக சிலுவையண்டை வாருங்கள்; கிறிஸ்து உங்களுக்கு உண்டு பண்ணிய பரிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வெளி 21:21 பன்னிரண்டு வாசல்களும் பன்னிரெண்டு முத்துக்களாயிருந்தன. ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. பரி. ஆவியின் வார்த்தைகளை

ஆராய்வது ஆனந்தமானது அந்த வார்த்தைக்குள் அடங்கியிருக்கும் ஆவிக்குரிய சத்தியங்களைப்பற்றிய ஆன்மீக அறிவொளியைப் பெறுவது அதைவிட ஆனந்தமானது. நாம் வாசித்த வேதவாக்கியம் பரலோகத்தைப் 12 வாசல்கள் கொண்ட நகரமாகக் காண்பிக்கிறது. ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாய் இருந்தது. தேவன் இவ்விதமாக முத்தாலான வாசலை வைத்ததே நமக்கு ஓர் உன்னதமான செய்தியை அறிவிக்கவேயாகும். அறிஞர்களின் கூற்றுப்படி வேதனையின் விளை பொருளே முத்து. பாடுகளின் படைப்பே முத்து. சிப்பிகளில் ஈரிதழ்சிப்பி என்ற ஒரு வகைச் சிப்பி உண்டு. இந்த சிப்பிக்குள் ஏதாவது எல்லை மீறி பிரவேசித்தால் அது மணலின் சிறு மணிகளாகவும் இருக்கலாம். சிப்பியானது ஒருவகை திரவத்தை கசியச் செய்யும் பின் அது இறுதி வைரமாகி முத்தாக மாறுகிறது. இதை ஒரு வேதனையின் அனுபவமாகவே ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இங்கு முத்தானது அறை கூவும் செய்தி என்ன தெரியுமா? இந்த நித்திய நகரத்திற்குள்ளான பிரவேசம் கிறிஸ்து சிலுவையில் பட்ட காயங்கள் மூலமாகவேயாகும். அது சிலுவை மூலம், சிலுவைப்பாடுகள் மூலம் திவ்வியபிரசன்னத்திற்குள் பிரவேசிக்கும் வழி இது. கிறிஸ்து சிலுவையில் வேதனையின் விளிம்பிற்கே சென்றார், வருத்தத்தின் எல்லைக்கும் பாடுகளின் உச்சிக்கும் சென்றார். "5 கண்ட மக்களுக்காக 5 காயங்கள் பட்டீர்" என்றான் ஒரு பக்தன் மிக அழகாக. இம்முத்து அடையாளமாக காண்பிப்பதைப் பற்றிப் பிடியுங்கள். தேவனுடைய நகரத்திற்குள் முத்தாலான வாசலால் மாத்திரம் பிரவேசிக்கலாம். இன்னோர் விதமாக சொல்வதானால் கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்த வேலையை விசுவாசிப்பதன் மூலம் ஆகும்.

நீங்கள் வச்சிரக்கல் மதிலால் ஏறிப்போக முடியாது முத்தாலான வாசல் வழியாக மாத்திரமே போகலாம். கிறிஸ்து உங்கள் சார்பாக சிலுவைக்குச் சென்றதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவரது மரணம் உங்களுக்குப் பாவ மன்னிப்பை உண்டு பண்ணியது என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். மனந்திரும்பி இயேசுவை விசுவாசியுங்கள். நீங்கள் நித்திய நகரத்தின் பிரஜைகள் ஆவதை எதுவும் தடுக்க முடியாது. பரலோக பிரஜைகளாக மாறுவது மாத்திரமல்ல அங்கு என்ன செய்வோம் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். பரலோகம் தொடர்ச்சியான துதி காணப்படும் இடம். வெளி 4:11

தொடரும்

## *வினாவிடை 32 சரியான பதில்கள்*

01. இயேசுவே
02. பன்னிரண்டு வயதில்
03. ஆறு
04. இருக்கிறவராக இருக்கிறேன்
05. பொன்னணிகள்
06. யோவான்
07. கமாலியேலின் பாதத்தில்
08. பத்மு
09. வரிவசூலிப்பவன்
10. உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுபவன்.

# வித்திடும் வித்தகர்கள்

# ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி

## அலைச்சல்கள்

கிறிஸ்துவைப்பற்றி எங்கும் பிரசங்கிப்பதில் ஹட்சன் மனம் சந்தோஷமடைந்தது. பிரிட்டிஷ் வேதாகமச் சங்கமும், அயல்நாட்டு வேதாகமச் சங்கமும் ஏராளமான சுவிசேஷ புத்தகங்களும், துண்டுப்பிரதிகளும் கொடுத்து பிரயாணச் செலவையும் கொடுக்க முன்வந்தது.

தென் கடற்கரை வழியாய் யாங்ஸியின் வழியாய் சீன உட்பகுதிக்குச் சென்று சுவிசேஷம் அறிவிக்க ஆர்வம் கொண்டார். நாங்கிங் துறைமுகத்திலிருந்து சுமார் 400 மைல்களுக்கப்பால் உள்ள உள்நாட்டுப் பகுதி அது. அதுவே டெய்ப்பிங் புரட்சியாளர்களின் தலைமை ஸ்தாபனம்.

சீன உள்பகுதிகளுக்குச் செல்ல ஆங்கிலேயர்களுக்கு அனுமதியில்லாததால் எந்நேரமும் ஆபத்து வரலாம். மரணம் ஏற்படலாம். ஏற்கனவே ஷங்செளவில் சித்திர வதைக்குட்பட்டு மரண அகோரத்தில் பாதையில் நடந்து வந்த அனுபவம் ஹட்சனுக்கிருந்தது. எனினும் சுவிசேஷம் சொல்ல துணிந்து சென்றார்.

இதுவரையில் எந்த மிஷனெரிகளும் செல்லாத 51 நகரங்களுக்குச் சென்று விநியோகித்தார். பின்னர் வீடு திரும்பினார். உள்நாட்டிற்குள் சென்றதால் ஆங்கில பிரதிநிதியின் முன்னிலையில் அதிகாரிகளால் கடுமையாக ஹட்சன் எச்சரிக்கப்பட்டார். எனவே அவர் பயணத்தில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்பு ஹட்சன்,பர்டன், டாக்டர் பார்க்கர் ஆகிய மூவரும் சேர்ந்து நிங்போ என்ற நகரத்துக்குச் செல்ல திட்டமிட்டனர். ஒரு சில மிஷனரி சங்கங்கள் அங்கு பணிபுரிந்தன. அவ்விடத்தில் ஹட்சனும், பர்டனும், டாக்டர் பார்க்கரும் சில நாள்கள் பயணம் செய்து சூரியன் அஸ்தமிக்கும் வேளையில் அங்கு சேர்ந்தனர். மிகுந்த அன்புடன் அங்குள்ள மிஷனெரிகள் அவர்கள் மூவரையும் வரவேற்றனர். 1842 ஆம் ஆண்டு ஆங்கிலேயரும் சீனரும் நாங்கிங் உடன்படிக்கை செய்து கொண்ட பின்பு 1843 ஆம் ஆண்டு சீனாவுக்கு வந்து நிங்போ என்னும் பட்டணத்தில் செல்வி அல்டெர்சி ஒரு சீனப் பள்ளியை நிறுவினார். இலண்டன் மிஷனெரி சங்கத்தினரின் அனாதை பிள்ளைகள் அல்டெர்சிக்கு உதவியாயிருந்தனர். ஆனால் அங்கு மிஷன் மருத்துவமனை ஒன்று இல்லாதது பெருங்குறையாகவே இருந்தது. டாக்டர் பார்க்கர்

அங்கு மிஷனெரிப்பணியோடு மருத்துவப்பணியும் செய்ய அழைக்கப்பட்டால் நலமாயிருக்கும் என்று ஹட்சன் நினைத்தார்.

சில நாள்களில் நிங்போ பயணத்தை முடித்து யாவரும் வீடு வந்தனர். நாங்கையில் காரியாலயம் நிறுவுவது மிக முக்கியம் அல்ல, சீன உள்நாட்டு பகுதிகளில் பிரவேசித்து சுவிசேஷம் அறிவிப்பதே மிக முக்கியம் என்று கமிட்டியிடமிருந்து கடிதம் வந்திருந்தது. ஆனால் மிஷனெரிகள் தங்குவதற்கு இடம்கூட இல்லையே.

ஆகஸ்டு 6 ஆம் தேதியன்று ஹட்சன் டெய்லரும், டாக்டர் பார்க்கரும் தாங்கள் வெகுநாள்களாக எதிர்பார்த்திருந்த கட்டளை ஒன்றைப் பெற்றனர். "செப்டம்பர் மாத இறுதிக்குள் வீட்டைக் காலி பண்ண வேண்டும். இலண்டன் மிஷன் சங்க மிஷனெரிகள் வந்து சேரப் போகிறார்கள்" என்பதே இச்செய்தி. சீன மிஷனெரிக்குழு சீன மிஷனெரிகளான ஹட்சன், பார்க்கர் குடும்பம் இவர்களின் வீட்டைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

கர்த்தரோ; தம் ஊழியர்கள் மேலும், ஊழியங்கள் மேலும் மிகுந்த அக்கறையுள்ளவராயிருந்தார். சில நாள்களுக்குள் டாக்டர் பார்க்கருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் டாக்டர் பார்க்கர் தன் குடும்பத்தோடு உடனடியாக நிங்போவுக்கு வரவேண்டும் என்றும் ஆஸ்பத்திரி செலவுக்காக வருடத்துக்கு 800 டாலர்கள் கொடுத்து ஆதரிப்போம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அவர் உடனே புறப்பட ஆயத்தமானார்.

ஹட்சன் துணையற்றவர் போல விடப்பட்டார். நாட்டையும் வீட்டையும் தான் விட்டு வந்தார். சீனாவில் தன் கூட்டாளியாயிருந்த டாக்டர் பார்க்கரையும் பிரிய வேண்டியதாயிற்று. வீட்டை உடனடியாக காலிபண்ண வேண்டியிருந்ததால் மீண்டும் வீடு தேடி அலைந்தார். பண நெருக்கடியில் எவ்விதம் வீடு வாடகைக்கு எடுப்பது? மனவேதனையடைந்தார். அப்போது "எல்லாரும் அதிகமாக முன் பணம் கேட்கிறார்கள். நான் எவ்விதம் கொடுப்பேன். தேவையானால் சீன உடையை உடுத்தி சீனர்கள் மத்தியிலேயே ஓர் இடம் தேடுகிறேன். இந்த மாற்றம் மிகவும் கடினமாயிருக்கிறது. எனக்காக ஜெபிப்பாயா" என்று அவருடைய தங்கைக்குக் கடிதம் எழுதினார்.

தொடரும்

## வினாவிடை - 33

1. தன் முகநாடியை வேறுபடுத்தி பித்தங்கொண்டவன் போல தன்னை காண்பித்த ராஜா யார்?
2. "பாவஞ் செய்யாத மனுஷன் இல்லையே" இது யாருடைய கூற்று
3. எதனுடைய நாசியின் செருக்கு பயங்கரமாயிருக்கும்
4. உன் மாம்சத்தை பாவத்திற்குள்ளாக்க உன் ............ இடம் கொடாதே
5. ஏழு நாட்கள் மட்டுமே ராஜாவாய் இருந்தவன் யார்
6. "நான் பேச்சிலே கல்லாதவனாயிருந்தும் அறிவிலே கல்லாதவனல்ல" என்று கூறியவர் யார்
7. யார் பேதையான புறாவைப் போல இருக்கிறாள்?
8. கீரைத் தோட்டம் போட ஒரு மனிதனை சதி செய்து கொலை செய்த ராணி யார்?
9. நட்சத்திரங்களுக்கு மேலாக சிங்காசனத்தை உயர்த்துவேன் என பெருமை பேசியது யார்?
10. ஒளி வீசத்தக்கதாக தும்முகின்ற விலங்கு?

# யாரை சிநேகிப்பாய்


அடிமை வியாபாரம் மும்முரமாய் நடந்து கொண்டிருந்த காலம். அடிமை வியாபாரிகளிலும் மனிதாபிமானம் கொண்ட சில அடிமை வியாபாரிகள் இருக் கத்தான் செய்தனர். சில எஜமானர் களும் அடிமைகளை மனிதாபிமானத்துடன நடத்தியும் வந்தனர்.

அடிமைகளின் எஜமானர் ஒருவருக்கு ஜோ என்ற அடிமையின் பேரில் ஒரு பற்றுதல் ஏற்பட்டுவிட்டது. என்ன செய்வதென்றாலும் ஜோவை கலந்தா லோசிக்காமல் செய்யமாட்டார். ஒரு நாள் அடிமைச் சந்தைக்குப் போய் சில அடிமைகளை வாங்கி வர புறப்பட்டார். அப்போது ஜோவையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு போனார். அச்சந்தையில் சில அடிமைகளை வாங்கி னார்கள். அங்கு ஒரு கிழவனும் விற்பனைக்கு இருந்தான். ஜோ தன் எஜமானரைப் பார்த்து அக்கிழவனையும் வாங்கும் படி கேட்டான்; எஜமானர் அவன் அதிகக் கிழவன் ஒரு வேலைக்கும் உதவமாட்டான், வேண்டாம் என்றார். ஆனால் ஜோ அவரை கெஞ்சு கெஞ்சென்று கெஞ்சி அக்கிழவனை ஒரு சிறு தொகைக்கு வாங்கவைத்து விட்டான். எஜமானுக்கு ஜோ ஏன் அக்கிழ வனை வாங்கும்படி வற்புறுத்தினான் என்பதற்கு விடைகாண ஆசை. அவர் அவர்களிருவரையும் கவனித்துக் கொண்டே வந்தார்.



ஒருநாள் அக்கிழவன் சுகவீனமாகிவிட்டான். அன்றே ஜோ அக்கிழவ னைத் தன் அறைக்கு கொண்டு வந்து அக்கறையோடு சிகிச்சையளித்து அவனைத் தன் தகப்பன் போல் கவனித்து வந்தான். இதைக்கண்ட எஜமானர் ஜோவைக் கூப்பிட்டு அக்கிழவன் உன்தகப்பனா என்றார், இல்லை என்றான். அப்படியென்றால் அவனை இவ்வளவு அக்கறையோடு கவனித்து வருகிறாயே, அவன் உன் சினேகிதனா என்றார். அதற்கும் ஜோ இல்லை என்று சொல்லி விட்டு அவன் என் பழைய விரோதி; அனேக ஆண்டுகளுக்கு முன் நான் சிறு பையனாக என் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சமயத்தில் ஒருவருக்கும் தெரியாமல் தூக்கிக் கொண்டு போய், சித்திர வதை செய்து, என்னை எங்கோ கொண்டு போய் அடிமையாக விற்றுவிட்டான். அவனை சந்தை யில் பார்த்தவுடன் அடையாளம் கண்டு கொண்டேன். நான் ஒரு கிறிஸ்தவன். இயேசு கிறிஸ்து "உங்கள் சத்துருக் களைச் சினேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள்; உங்களை பகைக்கிறவர் களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக் காகவும் துன்பபடுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் (மத். 5:44) என்று கூறியிருக்கிறார். ஆகையால் நான் என் விரோதிக்கு உதவி செய்கிறேன் என்றான்.

"நாமும் ஆண்டவருக்கு விரோதமாய் பாவம் செய்து அவரைவிட்டு தூர விலகிப் போனாலும் அவர்தம் அன்பினால் நம்மை மன்னித்து நம்மை சேர்த்துக் கொள்ள தயாராயிருக்கிறார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக் காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகின்றார்." (ரோமர் 5:8)




உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு போஜனங்கொடு, அவன் தாக மாயிருந்தால் அவனுக்குப் பானம் கொடு; நீ இப்படி செய்வதனால் அக்கினித்தழலை அவன்தலைமேல்குவிப்பாய்" (ரோமர் 12:20)

*இதை வாசிக்கும் அன்பரே! சத்துருவை சினேகிக்க ஆயத்தமா?*

# குறுக்கெழுத்துப் போட்டி – 31

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | | 2 |
| | ■ | | ■ | ■ | ■ | ■ | 3 | |
| | ■ | | | | | 4 | ■ | |
| | ■ | | ■ | ■ | ■ | | ■ | ■ |
| | ■ | 5 | | | ■ | 6 | | |
| | ■ | ■ | ■ | 7 | ■ | | ■ | |
| ■ | ■ | | ■ | | | 8 | ■ | |
| 9 | ■ | | ■ | | ■ | | ■ | |
| ■ | 10 | 11 | | | ■ | ■ | | 12 |

**இடமிருந்து வலமாக**

1. நியாயப்பிரமானத்தையும் ராஜ நீதியையும் அறிந்தவர்களிடத்தில் பேசுவது தனக்கு வழக்கமாயிருக்கிறது என்றது யார்?
3. இரண்டு ஒரே எழுத்துக்கள் சேர்ந்து ஒரு மனிதன் பெயராகின்றது?
5. தேவ பக்தி மிகுந்தவன், தேவ சமூகம் நின்றவன், அற்புதங்கள் பல செய் தவன் அரசனையே கலங்கச் செய்தவன், ஒரு பெண்ணைக்கண்டு பயந்து மரிக்க நினைத்தவன். இன்று பரலோகில் இருப்பவன்.
6. "என்னைப்பற்றி தேவனை மகிமைப்படுத்தினார்கள்" யாரை?
10. கசப்பான தண்ணீா மதுரமான இடம்?

**மேலிருந்து கீழாக**

1. நீ உன்னிலுள்ள உன் தேவனுடைய ஞானத்தின் படியே ஏற்படுத்துவாயாக என்று உரைத்தது யார்?
2. ஏசாவின் மறுபெயர்?
4. முத்திரை போடப்படாத ஒரு கடிதத்தை அனுப்பியவன் யார்?
7. எந்தக் காற்றினால் உஷ்ணம் வரும்
9. வேதாகமத்திலுள்ள சிறிய பெயர்?

**வலமிருந்து இடமாக**

2. ஞான திருஷ்டியுள்ள புருஷன் என அழைக்கப்பட்டவன்
4. தேவனாகிய கர்த்தரை நிந்திக்கவும் அவுருக்கு விரோதமாக பேசவும் நிருபங்களை எழுதியவன்.
8. நீ என் எலும்பும் என் மாமிசமானவன் என்று சொன்னவன் யார்?
12. அரங்கசாலைக்குள் இழுத்துக் கொண்டு போகப்பட்டவர்களில் ஒருவர்

**கீழிருந்து மேலாக**


3. தொட்ட பின் விசுவாசிப்பேன் என்றது யார்?
5. விதவைகளை வெறுமையாய் அனுப்பி விட்டீர்கள் என்று கூறியது யார்.
11. தன் புருஷனிடம், எனக்குப் பிள்ளை கொடும் இல்லை நான் சாகின்றேன் என்ற ஸ்திரி?
12. பிரதான தூதா்களில் ஒருவன்

# நீ எங்கே இருக்கிறாய்?

இன்று எமது வாழ்வில், நாம் காணும் நிலை; நான் எப்படி இருக்கிறேன்? எங்கு இருக்கிறேன்? எங்கே போகிறேன் இப்படியான நோக்கம் அற்று வாழுகின்றோம். பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்ற நிலையில் பலர் வாழ்கின்றார்கள். அந்தோ என்ன பரிதாபம், எமது வாழ்வில் எமது வாழ்வின் நோக்கம் இலட்சியம் என்ன? இதனால்தான் வாழ்வில் எமக்கு மகிழ்ச்சியோ அல்லது தெளிவோ இன்றி இருக்கின்றோம்.

ஆதியில் தேவன் மனிதனை படைத்தார் ஆதாம் ஏவாளை தேவன் ஏதேன் தோட்டத்தில் வாழ வைத்தார். இவர்கள் பாவம் செய்ததன் விளைவாக நிர்வாணம் ஆகி தேவமகிமை இழந்து மரங்களுக்கு பின் ஒழித்துக் கொண்டார்கள்.

இவர்கள் நினைத்தது என்ன என்றால் இவ்வாறு ஒழித்துக் கொள்வதால், பிரச்சினைதான் தீர்ந்து விடும் என நினைத்தார்கள். ஆனால் உண்மை என்ன? தேவன் அவர்களை தேடிவந்தார்! தேவன் அவனை நாடி ஆதாமே நீ எங்கே இருக்கின்றாய்? என்று கேட்டார்!



இன்றும் எமது வாழ்விற்குள் வாசம் செய்யவே தேவன் இந்த பூமிக்கு வந்தார். இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்ததன் நோக்கம் பாவிகளாகிய எம்மை மீட்கும்படியாகவும், எம்மை மீட்கப்பட்ட தேவசாயலாக மாற்றவுமே இயேசு கிறிஸ்து இப் பூமிக்கு வந்தார்.

அன்று தேவன் ஆதாமிடம் கேட்ட கேள்வி ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? தேவனுக்கு தெரியும் அவன் எங்கே என்று. ஆயினும் அவர் அவ்வாறு கேட்டதன் நோக்கம் ஆதாமே நான் உன்னை வைத்த இடத்தில் நீ இருக்கிறாயா? ஆனால் நீ அந்த நிலையில் இருந்து தவறிப் போனதை உணர்கின்றாயா? என்பதற்காகவே தேவன் அவனிடம் கேட்டார்.

இன்றும் என் நண்பனே தேவன் உன்னை தனது விலையேறப்பட்ட இரத்தத்தால் மீட்டு, உன்னை பரிசுத்தப்படுத்தினாரே. ஆயினும் இன்று நீ அந்த நிலையில் இருக்கின்றாயா? அல்லது தவறிவிட்டதை உணர்கின்றாயா?

அன்று ஆதாம் தான் தவறு விட்டதால் தன்னை நிர்வாணியாக கண்டு அத்தி இலைகளால் தன்னை மூடிக் கொண்டு தான் நிர்வாணி அல்ல என தனக்கு தான் தீர்மானித்து விட்டான்.

இன்றும் நாம் தேவனை விட்டு போய்விட்டோம். பரிசுத்தம் இல்லாத நிலைமை ஆயினும் எமது வாழ்விற்கு நாம் ஆராதனை, ஜெபம், உபவாசம், ஊழியம், காணிக்கை போன்ற பலவிதமான அத்தி இலைகளால், எம்மை மூடிக் கொண்டு நாம் பரிசுத்தவான்கள், தேவபக்தியானவர்கள் என எம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம்.

நண்பனே! மேற் சொன்ன ஆராதனை முறைகள், ஜெபங்கள் யாவும் நல்லது தான் ஆயினும் தேவன் வைத்த ஸ்தானத்தில் இருந்து விழுந்து போன பின், பாவத்தில் வாழ்ந்து கொண்டு, பாவசிந்தனைகளுடன் பெருமை, மன்னியாமை, கீழ்படியாமை.......... இப்படி பலவிதமான நினைவுகளுடன் வாழும்போது எமது ஆராதனையும் ஊழியமும் அத்தி இலைகள் என்பதை மறந்து போகாதே. தேவனுடன் சரியான உறவு இல்லாது தேவபிரசன்னத்தை நாடும், அல்லது உருவாக முயலும் போது நாம் அத்தி இலைகளால் எம்மை மூடிக் கொள்கிறோம்.

ஆதாம் தேவமகிமை இழந்துபோய் மரங்களுக்கு பின்னால் ஒழித்துக் கொண்டான். இன்று தேவனுடைய மகிமை எம்மில் காணப்படுகிறதா? மாறாக அதற்கு ஈடு செய்யும் வண்ணம் போலியான உலப்பிரகாரமான மகிமையை சொல்லுகின்றோமா? லூக்கா சுவிசேசத்தில் காண்கின்ற பரிசேயன் போல் நான் வாரத்தில் 2 தடவை உபவாசிக் கின்றேன். தசமபாவம் கொடுக்கின்றேன். நான் இந்த ஆயக்காரனைப் போல் இராதபடியால் உம்மை ஸ்தோத்திக் கிறேன்....... இப்படி நாமும் உபவாசம் ஜெபங்கள் காணிக்கைகள் மற்றவர்களை விட மேலானவர்கள் என்று கூறி தேவமகிமையை இந்த அற்பமான மகிமையால் மூடுகின்றோமா? விசுவாசத்தால் வராத யாவும் பாவம் எமது ஆராதனையும் ஊழியங்களும் தேவன் மேல் உண்மை விசுவாசத்தால் செய்யப்படு கின்றதா? அல்லது எமக்கு பெயர், மகிமை உண்டாக செய்கின்றோமா? தேவமகிமை என்று எமது மகிமையை தேடுகின்றோமா? அன்பரே, மீண்டும் நீயும் நானும் தேவமகிமைக்குள் வர வேண்டும்....... " நாம் மகிமைமேல் மகிமை அடைந்து தேவகுமாரனின் சாயலுக்கு ஒப்பாக மாற்றவே பரிசுத்த ஆவியானவர் எம்முடன் செயற்படுகின்றார். நாமும் இயேசுவின் சாயலை வஞ்சிக்கின்றோமா? அல்லது ஆதாமின் சாயலிலே வாழ்வை ஓட்டி முடிக்கின்றோமா?
"இயேசு சீக்கிரமாக வருகின்றார்."

ஆதாம் ஒழித்துக் கொண்டான்! இன்று நாம் எங்கே ஒழித்துக் கொண்டு இருக்கின்றோம்? நாம் பெரியவர்கள் போல, படித்தவர் போல நாம் ஜீவித்தாலும் எமது வாழ்க்கை தேவ சத்தியத்தில் நிலைத்திராமல் எமக்கு நாமே விருட்சங்களை உண்டுபண்ணி அதில் மறைந்து வாழ்கின்றோம். உதாரணம் வேதம் சொல்கின்றது "நீயோ கடன் வாங்குவதில்லை......" புதிய ஏற்பாட்டில் "அன்பை தவிர வேறுஎதிலும் கடன்படாதிருங்கள்" ஆனால் இன்று எத்தனைபேர் - "CREDIT CARD" கடன் அட்டை வைத்திருக்கின்றோம் இது பலருக்கு ஒரு பெரிய மகிமை என கருதுகின்றார்கள் இது வேதாகமத்தின் போதனைக்கு எதிரானது, என்பதினை உணராது எமக்கு நாமே விருட்சம் என்றும் போதனை உண்டாக்கி அதில் ஒழித்து வாழ்கின்றோம்.

உண்மையான மனம் திரும்புதல் இல்லை. மனம் திரும்புதலின் கனியும் இல்லை ஆயினும் நாம் தசமபாகம், காணிக்கை ஜெபம், துதி........ போன்ற விருட்சங்களை உண்டு பண்ணி அதற்குப் பின் ஒழித்துக் கொண்டு இருக்கின்றோம்.

இன்று தேவன் உன்னைப்பார்த்து மகனே, மகளே... நீ எங்கே இருக்கின்றாய்? உன்னை குற்றப்படுத்த அல்ல உன்னை உணர்வடையபண்ணவே தேவன் விரும்புகின்றார். மாற்றம் என்னும் போது அது முதலில் மனதில் தோன்ற வேண்டும். அது எமது வாழ்வில் செயல்பட வேண்டும். இதற்காகவே இன்று தேவன் உன்னுடன் இடைப்படுகின்றார். இதை வாசிக்கும் போது "நான் எங்கே இருக்கின்றேன்" என்பதனை திறந்த மனதுடன், உன்னையேபார். சிந்தி உணர்வடைவாயாக.

தேவன் ஒரு மிருகத்தை கொன்று அதன் இரத்தத்தை சிந்தி, அதன் தோலை எடுத்து ஆதாமிற்கும், ஏவாளுக்கும் கொடுத்தார்.

அதேவண்ணம் முழுஉலகிற்கும், உனக்கும், எனக்கும் தேவன் இயேசுவை பூமிக்கு அனுப்பினார். "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி"...

இந்த ஆட்டுக்குட்டியானவர் தன்னையே சிலுவைக்கு ஒப்புக் கொடுத்து இரத்தம் சிந்தி எமக்கு இரட்சிப்பின் வஸ்திரம், நீதியின் சால்வை போன்றவற்றை தந்துள்ளார். எமது நிர்வாணம் மூடவல்ல. நாம் தேவசாயலாக மாற வேண்டும். என்பதற்காகவே. நீ...... இயேசுவைப்போல மாற வேண்டும். என்பதற்காக தன்னையே ஒப்புக் கொடுத்து உன்னை மாற்றி தேவனுக்கு முன் குற்றமற்றவனாகவும், கறை அற்றவனாகவும் ஆக நிறுத்தவே தேடுகின்றார். நண்பரே...... நீ எங்கே இருக்கின்றாய்?

நாம் இங்கு, உலக பிரகாரம் எங்கு எப்படி இருக்கின்றோம். என்பதாலும் நாம் பரலோகில் அங்கு அப்படி இருக்க முடியுமா? என்பதினை சிந்திப்பாய். செயல்படுவாய். இயேசுவிடம் வருவாய்.

(போல். கி.சோ)

## குறுக்கெழுத்துப்போட்டி - 30 சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

*1. மனதுருக்கம்*
*3. கல்*
*5. காயீன்*
*6. புலம்பல்*
*7. பல்*
*8. உலகத்தில்*

**வலமிருந்து இடமாக**

*3. கன்னி*
*5. காகம்*

**மேலிருந்து கீழாக**

*1. மன்னிப்பு*
*2. துரு(க்)கம்*
*5. கால்*

**கீழிருந்து மேலாக**

*4. கல்வி*
*7. பகல்*
*8. உப்பு*
*9. கரம்*

## சந்தா விபரம்

இச்சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

### சந்தா விபரம், (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L. Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L. Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L. Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L. Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்.

குறிப்பு : தற்போது ஏற்பட்டுள்ள கடதாசியின் விலையேற்றம், தபால் செலவு அதிகரிப்பு என்பவைகள் காரணமாக சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றி.

- ஆசிரியர் -

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்.

## சந்தா கூப்பன்

பெயர் : ____________________

விலாசம் : ____________________

____________________

____________________

____________________

தயவுசெய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.







Zion Church Office
No. 347. Navalar Road,
Jaffna, Sri Lanka.

To. Miss. MATHANA GINANACHANDRAN
ALVAI EAST,
ALVAI
MADATHTHADY.

St. Joseph's Catholic Press, 360. Main Street,
Jaffna, Sri Lanka. T. P. 021-222 2378